

இராமநதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் தமிழ்நாடு கடல்சார் வாரியம் மூலம் ரூ.4.10 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட துறைமுக அலுவலக கட்டடத்தை பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு.ஆர் செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர்/துணைத்தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் த. வெங்கடேஷ், இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் . பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன் ஆகியோர் உள்ளனர்.

## கிராமப்புற சிறுவணிகர்கள் வணிக உரிமம்!

# நடைமுறையினை எளிமைப்படுத்த குழு; முதல்வர் உத்தரவு!

### ‘நீலிக்கண்ணீர் வடிக்க வேண்டாம்’ என எடப்பாடி பழனிச்சாமிக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி பதில்!

சென்னை, ஆக.1-

கிராமப்புற சிறுவணிகர்கள் வணிக உரிமம் பெறுவது தொடர்பாக நடைமுறையினை எளிமைப்படுத்துவதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைக் குழு அமைத்து அதன்படி நடவடிக்கை எடுக்க உள்ளார். எனவே கிராமப்புற சிறுவணிகர் கள் தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி நீலிக்கண்ணீர் வடிக்க வேண்டாம் என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பதிலடி கொடுத்துள்ளார்


இதுகுறித்து அமைச்சர் ஐ.பெரியசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தவறான கூட்டணி வைத்துவிட்டதால் தடுமாறிக் கொண்டிருக்கும் எதிர் கட்சித் தலைவர் திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பரப்புரை என்ற பெயரில் தினசரி ஏதாவது ஒன்றை சொல்லிக் கொண்டிருக்கிறார், இவர் சொல்லும் எதுவும் மக்களிடம் எடுபடவில்லை. எனவே, கிராமப்புறங்களில் சிறுதொழில் மற்றும் வணிகம் செய்ய உரிமக் கட்டணம் என்ற ஒரு சட்டத்தை தமிழ்நாடு அரசு ஏதோ புதிதாக கொண்டு வந்தது போல தனது வழக்கமான அவதூறு பிரச்சா ரத்தை இன்று அவிழ்த்துவிட்டுள்ளார்.

உண்மையில் கிராம ஊராட்சிகளில் தொழில் உரிமம் பெறவேண்டும் என்பது 1958இல் கொண்டுவரப்பட்டது. இது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்1994இல் பிரிவு 159இன் படியும் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உறுதி படுத்தப்பட்டுள்ளது. இதே சட்டத்தின்கீழ் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஆட்சிக்காலத்தில் “அபாயகரமானதும் மற்றும் தீங்குவிளைவிக்கும் வர்த்தக உரிமம் (Dangerous and Offensive Trade Licence)” என்ற பெயரில் வழங்கப்பட்டு வந்ததுதான் இந்த நடைமுறை! இதனைக்கூட தெரிந்துகொள்ளாமல் ஆட்சி நடத்திவிட்டு இப்போது வழக்கம்போல் தூக்கம் கலைந்து எழுந்து வந்து பரப்புரை என்ற பெயரில் பழைய அறிக்கை அரசியலையே நடத்திக் கொண்டிருக்கிறார்.

**பொதுமக்கள்**
**ஏமாறத் தயாராக இல்லை!**

அம்மையார் ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சி காலத்தில், 201112இல் 85,649 ஆக இருந்த வணிக உரிமங்களின் எண்ணிக்கை எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஆட்சிக் காலத்தில் 202021இல் 2,05,100 ஆக உயர்ந்தது. அதேபோல் 201112இல் ரூ.5.40 கோடியாக இருந்த உரிமக் கட்டணம் இவரது ஆட்சிக் காலத்தில் ரூ.12.90 கோடியாக உயர்ந்தது. இவையெல்லாம் கோப்புகளில் உள்ளது. அவர் மறுக்க முடியாது. செய்வதை எல்லாம் செய்துவிட்டு இன்றைக்கு கிராமப்புற சிறு வணிகர்களுக்காக பரிந்து பேசுவது போல இவர் நாடகம் ஆடுவதைப் பார்த்துப் பொதுமக்கள் ஏமாந்து போக



தயாராக இல்லை.

2018ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் மட்டும் வெளியிடப்பட்ட அரசிதழில் ஒன்றியம் வாரியாக, ஊராட்சி வாரியாக ஒவ்வொரு தொழிலுக்கும், எதிர்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ள தையல் கடை, பெட்டிக் கடை, சிறு உணவகம் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான தொழில்களுக்கும் உரிமக் கட்டணத்தை அரசிதழாக அச்சடித்து வழங்கியது அனைத்தும் அரசின் வசம் உள்ளது. இதனை நான் குற்றச்சாட்டாகக் கூறவில்லை. உரிமம் கட்டணம் என்பது எப்போதும் உள்ளது. அ.தி.மு.க ஆட்சிக் காலத்திலும் இருந்தது என்பதை நினைவூட்டவே சொல்கிறேன்.

கோவை மாவட்டத்திற்கு உரிமக் கட்டணம் குறிப்பிட்டு வெளியிட்டிருந்த அரசிதழ் நகலை இத்துடன் இணைத்துள்ளோம். இது ஒரு உதாரணத்திற்கு மட்டுமே. இதேபோல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு ஊராட்சிக்கும் அவரது ஆட்சிக் காலத்திலேயே தொடர்ந்து வெளியிட்டுவிட்டு இப்போது இந்த அரசை குறை கூறுவது அவரது இரட்டை வேடத்தைத் தான் வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது.

**தமிழ்நாடு அரசின் தற்போதையநட வடிக்கைக்கான பின்னணி;**

கிராமப்புற ஊராட்சிப் பகுதிகளில் வணிகம் / தொழில் புரிய பல்வேறு உரிமங்கள், “அபாயகரமானதும் மற்றும் தீங்கு விளைவிக்கும் வர்த்தக உரிமம்” என்று பழைய அடிப்படையில் வழங்கப்பட்டு வந்தன. அது போல, ஒவ்வொரு ஆண்டும் இந்த உரிமம் புதுபிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறையும் இருந்து வருகிறது. இன்றளவிலும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பல்வேறு வகையான நிறுவனங்கள் தொழில் / வர்த்தக உரிமம் பெற்று செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஊராட்சிகளுக்கு வரி வருமானம் கிடைத்து வருகிறது.

தொழில் உரிமம் பெறுவதற்கான சட்டப்பிரிவு பல ஆண்டுகளாக இருந்த போதும் முறையான விதிகள் (Rules) இல்லாததால் ஒவ்வொரு கிராம ஊராட்சிகளிலும் தங்களது தீர்மானத்தின் அடிப்படையில் பல்வேறு விதமான கட்ட ணங்கள் நிர்ணயம் செய்து அதிக அளவில் கட்டணங்களை வசூலித்து வந்தன. இக்குறைகளை நீக்கும்பொருட்டு பல்வேறு வணிகர்களின் கோரிக்கைகளை ஏற்று இப்போது புதிதாக விதிகள் உருவாக்கப்பட்டு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், ஆறாவது மாநில நிதிக்குழு, “அபாயகரமானதும் மற்றும் தீங்கு விளைவிக்கும் வர்த்தக உரிமம்” என வழங்கப்பட்டிருந்த பெயரை, “வணிக உரிமம்” என எளிமைப்படுத்தி மாற்றி வழங்க பரிந்துரை செய்துள்ளது. அதன்படி தற்போது வகுக்கப்பட்டுள்ள விதிகளில், “அபாயகரமானதும் மற்றும் தீங்கு விளைவிக்கும் வர்த்தக உரிமம்” என்ற பெயரை, “வணிகம் அல்லது தொழில் உரிம விதிகள்” என மாற்றி சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு 04.03.2024 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வணிகம் அல்லது தொழில் உரிமம் பெறுவ தற்கான நடைமுறை விதிகள் உருவாக்கப்பட்டு, 09.07.2025 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

இப்புதிய நடைமுறையின்படி, “ஆன்லைனில் வணிக உரிமம் பெறும் நடைமுறை” கொண்டு வரவும், முந்தைய சட்டப் பிரிவின்படி ஒவ்வொரு ஆண்டும் தொழில் உரிமம் புதுப்பிக்க வேண்டிய கட்டாயம் இருந்த நிலையில், தற்போது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தால் போதுமானது என்றசலுகை” “நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைவிட குறைந்த தொழில் உரிமக் கட்டணம் நிர்ணயம்” “வணிக உரிமம் பெறும் விண்ணப்பம் மீது 30 நாட்களுக்குள் முடிவு எடுக்காவிட்டால் உரிமம் வழங்கப்பட்டதாக கருதப்படும் (Deemed Approval) என்ற சலுகை” “விண்ணப்பங்களை முறையான விசாரணை உரிய வாய்ப்பு அளிக்காமல் நிராகரிக்கக்க கூடாது என்ற நிபந்தனை” என்றபல்வேறு நன்மைகள் இந்த புதிய விதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதும் எழை எளிய மக்களின்குறிப்பாக வணிகர்களுக்கு துணை நிற்கும் அரசாகும். வணிகர் நல னுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியுள்ள திராவிட மாடல் அரசின் நல்லெண்ணத்தின் மீது பழிபோட பழனிச்சாமி பகல் கனவு காண வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்நிலையில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பாக உரிமம் பெறுவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துவது குறித்து கோரிக்கை மனு ஒன்றினை நேற்று (30.07.2025) முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளனர். இந்த கோரிக்கை மனுவிலுள்ள விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக துறை அலுவலர்கள் மற்றும் வணிகர் சங்க அமைப்புகளின் பிரதிநிதி களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றினை அமைக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்தக்குழு, கிராமப்புறங்க ளில் சிறு வணிகர்கள் வணிக உரிமம் பெறுவது குறித்த நடைமுறையினை எளிமைப்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டு அரசுக்கு பரிந்துரைகளை வழங்கும். அதன் அடிப்படையில் புதிய சட்டத்தை நடைமுறைபடுத்துவது குறித்து முடிவு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியில் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சிப் பணிகள் குறித்து பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளருடன் புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா ஆலோசனை மேற்கொண்டார்.

---

### முன்னாள் அமைச்சர் – ஒருங்கிணைந்த விருதுநகர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# வே.தங்கபாண்டியன் 28வது நினைவு நாள் நிகழ்ச்சி!

### மல்லாங்கிணறில் உள்ள நினைவிடத்தில் – அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு மலரஞ்சலி!



விருதுநகர், ஆக.1–

விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் , தமிழக நிதி , சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சருமான தங்கம் தென்னரசு அவர்களின் தந்தையாரும் , நமது மாவட்ட தி.மு.கழக முன்னாள் செயலாளரும் , முன்னாள் வணிக வரித் துறை அமைச்சருமான மறைந்த வே.தங்க ப்பாண்டியன் நினைவு தினத்தையொட்டி, அவரது நினைவிடத்தில் அமைச்சர்கள் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் மற்றும் தங்கம் தென்னரசு ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

உடன் பாராளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்ட மன்ற உறுப்பினர்கள் விருதுநகர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் , இராஜபாளையம் தங்கப்பாண்டியன், மதுரை தளபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.ராஜன், முத்துராமலிங்கம், மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் மணிமாறன், திமுக தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், சிவகாசி துணை மேயர் விக்னேஷ் பிரியா, மாவட்ட பொருளாளர் கே.வி.கே. பிரபாகரன், சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன், சாத்தூர் ஒன்றியச் திமுக செயலாளர் கடற்கரைராஜ், முன்னாள் சேர்மன் சிவப்பிரகாசம், சுப்பராஜா, இராமநாதபுரம் தி.மு.க. செயலாளர் முத்துராமலிங்கம், காதர் பாட்சா, அரசு போக்குவரத்துக் கழகம் இராஜ செல்வம், தென்காசி தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.சேசுராஜன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபுஜி, திமுக துணைச் செயலாளர் குருசாமி, கிழக்கு தி.மு.க. ஒன்றிய செயலாளர் கனிமுருகன், விடத்தக்குளம் லோகநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் மதியழகன், சுதாகர், வக்கீல் அசோகன், துணை அமைப்பாளர் கற்பகம், நகரச் செயலாளர் இராமமூர்த்தி, இராஜபாளையம் மகளிர் அணி சுமதி இராமமூர்த்தி, காரியாபட்டி ஒன்றிய செயலாளர் கண்ணன், நகரச் செயலாளர் செந்தில், திருச்சுழி ஒன்றியச் செயலாளர் பொன்னுத்தம்பி, சந்தானப்பாண்டியன், ஏர்போர்ட் பாண்டி, பெரியகுளம் செல்லப் பாண்டி,நகரச் செயலாளர் காளிராஜன், நகரச் செயலாளர் எஸ்.ஆர். எஸ்.தனபாலன், காரயாபட்டி தலைமைச் செயற்குழு உறுப்பினர் தங்கத்தமிழ்வாணன், அருப்புக்கோட்டை நகரச் செயலாளர் ஏ.கே.மணி, சாத்தூர் நகரச் செயலாளர் குருசாமி, விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.இராஜகுரு, தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் , மாநில நிர்வாகிகள் , செயற்குழு உறுப்பினர்கள் , நகர , ஒன்றிய , பேரூர் கழகச் செயலாளர்கள் , மாவட்டப் பிரதிநிதிகள் , கழக பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் , உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் , உறுப்பினர்கள் , கழக முன்னோடிகள், தி.மு.க.வைச் சேர்ந்த அனைத்து அணிகளும் அஞ்சலியினை செலுத்தினர் .

---

# தடயவியல் திறன்களை நவீனமாக்க கூடுதல் நிதி ஒதுக்குவீர்!

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 1 -

பல்வேறு மாநிலங்களில் CCTNS திட்டத்தை மேம்படுத்துவதற்கும் தடயவியல் திறன்களை நவீனமயமாக்குவதற்கும் ஒன்றிய அரசு செய்த நிதி ஒதுக்கீடு குறித்து நாடாளுமன்ற மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

நாட்டில் பல்வேறு மாநிலங்களில் CCTNS திட்டத்தை மேம்படுத்துவதற்கும் தடயவியல் திறன்களை நவீனமயமாக்குவதற்கும் ஒன்றிய அரசு தனது நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளதா? அப்படியானால் கடந்த பத்து ஆண்டுகளில் மாநில வாரியாக ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்கள் தருக?

மாநில காவல் படைகளை நவீனமயமாக்குவதற்கு ஒன்றிய அரசு நிதியை அங்கீகரித்துள்ளது என்றாலும் கடந்த மூன்று ஆண்டுகளில் மிகக் குறைந்த தொகையையே செலவிட்டுள்ளது என்பது உண்மையா?

அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் அதற்கான காரணங்கள்?

இதற்கு உள்துறை அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் பண்டி சஞ்சய் குமார் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு :-

குற்றம் மற்றும் குற்றவாளிகள் தொடர்பான தரவுகளை சேகரித்தல் புதுப்பித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றை குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் அமைப்புகள் (CCTNS) எளிதாக்குகிறது. CCTNS திட்டத்தின் செயல்படுத்தல் மார்ச் 31 2018 அன்று நிறைவடைந்தது.

மேலும் இடைச்செயலாக்க குற்றவியல் நீதி அமைப்பு 2.0 (ICJS 2.0) திட்டத்தின் கீழ் உள்துறை அமைச்சகம் அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கும் ஐடி உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் நெட்வொர்க் இணைப்பு விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் தடயவியல் காவல் துறை சிறைச்சாலை மற்றும் திறன் மேம்பாட்டிற்காக நிதியை ஒதுக்கியுள்ளது.

மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் வழக்குத் தொடுப்புப் பிரிவுகள். ICJS 2.0 திட்டத்தை செயல்படுத்துவதற்கான நோடல் ஏஜென்சி NCRB ஆகும். மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிதியின் விவரங்கள் இணைப்பு-1 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

2021-22 முதல் 2025-



2026 வரையிலான காலத்திற்கு ரூ.2080.5 கோடி மொத்த நிதி ஒதுக்கீட்டில் தடயவியல் திறன்களை நவீனமயமாக்குவதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத்திற்கு இதற்காக 128 கோடியே 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் மொபைல் தடயவியல் வேன்கள் உள்ளிட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை நவீனமயமாக்குவதற்கும் நாட்டில் தடயவியல் அறிவியலுக்கான கல்வி வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் இந்த ஆய்வகங்களில் பயிற்சி பெற்ற மனிதவளம் கிடைப்பதை எளிதாக்குவதற்கும் உயர்தர தடயவியல் அறிவியல் வசதிகளை உருவாக்க பல மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு உதவி கிடைக்கிறது.

இதன்படி தமிழ்நாடு மாநிலத்திற்கு மொபைல் தடவயியல் வேன்களுக்காக ரூ. 36.04 கோடிகளும் உயர்தர தடயவியல் அறிவியல் வசதிகளை உருவாக்க ரூ. 22.2 கோடிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றைத் தவிர மாநில தடயவியல் அறிவியல் ஆய்வகங்களில் டிஎன்ஏ பகுப்பாய்வு மற்றும் சைபர் தடயவியல் திறன்களை வலுப்படுத்துவதற்கான நிர்பயா நிதியுதவி திட்டத்தின் கீழ் 30 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் 245.29 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி தமிழ் நாட்டிற்கு ரூ. 4 கோடியே 87 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## என்.எம்.துரைசாமி

### ஆகஸ்ட் 1 (2020)



**தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு புழல் பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.**

**புழல் ஒன்றியச் செயலாளராகவும், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட பொருளாளராகவும், அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**மூன்று முறை நாரவாரிகுப்பம் பேரூராட்சி மன்றத் தலைவராகவும், மூன்று முறைமாதவரம் நகர்மன்ற உறுப்பினராகவும் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். நெல்,அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**